# மாவத்தகம பிரதேச சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாவத்தகம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 73,487,296 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.2 தீர்க்கப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொங்கிரீட் செயற்திட்டத்தில் நிலுவையாக இருந்த வருமானமாக நீண்டகாலத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,716,098 தொகையான மீதி கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டது.

(ஆ) மூலதனச் செலவினக் கடன்கொடுத்தோரின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,343,460 தொகை கடன் மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய கடன்கொடுத்தோர் இனங்காணப்படாதிருந்ததுடன் அறிக்கைத் திகதி வரையிலும் வாகனக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற வீடமைப்பு அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய ரூபா 650,000 மீதியினை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளச் செலுத்தவேண்டிய வைப்பின் கீழ் ரூபா 2,071,509 தொகையான 04 வைப்பு மீதிகள் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்தின் ஊடாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்காக மீளப்பெறப்படாது என்ற நோக்கத்தில் வழங்கப்பட்ட ரூபா 25,000 தொகையானது நீண்ட காலமாக அறவிடவேண்டிய கடன் பணமாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வருமானக் கடன்பட்டோரின் கீழ் காணப்படுகின்ற பெறவேண்டிய முத்திரைக்கட்டண மீதியாக ரூபா 22,165,706 தொகையான மீதியினுள் 2010 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,165,706 தொகையான மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 761,446 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,416,592 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,418 | 2,147 | 3,738 |
| (ii) | வாடகை | 6,112 | 5,978 | 2,727 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,048 | 1,042 | 77 |
| (iv) | ஏனைய வருமானம் | 39,452 | 38,285 | 19,059 |

### 2.2.2 ஆதனவரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் 4,336 ஆதன வரி அலகுகளின் கீழ் மீளாய்வாண்டின் பட்டியலிடல்கள் ரூபா 1,604,797 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 3,302,177 ஆகக் காணப்பட்டது. நிலுவை வரியை அறவீடு செய்வற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி 31-42 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

(அ) சபையினால் நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளுக்குரிய மாதாந்த தவணைப்பணம் 4 - 28 இற்கிடையிலான வீச்சில் ரூபா 314,820 தொகையான நிலுவைப் பணம் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டது. அவ்வாறே சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட 06 சொத்துக்களில் 10 வருடகாலத்திலிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,045,295 தொகையான மீதியும் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையில் நீண்டகால வாடகை அடிப்படையின் கீழ் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்ட கடைகளிலிருந்து மீன்படிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட 32 ஆம் இலக்க கடை 2010 யூலை 19 ஆந் திகதி சபையினால் மீளக் கையேற்கப்பட்டிருந்த போதிலும் மின்சாரத்தைப் பெறும் பிரச்சினைகளின் அடிப்படையில் அந்தக் கடைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது. அவ்வாறே இலங்கை வங்கிக் கட்டிடம் 2011 செப்தெம்பர் 30 ஆந் திகதி தொடக்கம் 2012 அகஸ்ட் 01 வரை 10 மாதகாலத்திற்கு வாடகைக்கு வழங்க முடியாமையினால் ஆகக் குறைந்த கேள்வியின் அடிப்படையில் சபைக்கு ரூபா 252,000 (25,200x10) அளவிலான வருமானமொன்றை உழைக்க முடியாதிருந்தது.

### 2.2.4 வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் முன்னைய ஆண்டுகளிலிருந்து கொண்டவரப்படுகின்ற தீர்க்கப்படாதிருந்த ரூபா 77,500 தொகையான வியாபார அனுமதிப்பத்திர நிலுவை மீதி காணப்பட்டது.

### 2.2.5 வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம்

சபை அதிகாரப்பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உபவிதிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டியை நிறுத்தி வைப்பதற்குரிய வருடாந்த அல்லது காலரீதியான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கோ அல்லது நிறுத்தி வைக்கும் இடங்களை முறைமைப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 528,875 ஆகவும் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 22,165,706 ஆகவும் இருந்தது.

### 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 சனவரி 04 ஆந் திகதி நிலக்கூறிடல் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 5 ஏக்கர் 2 றூட் 7 பேர்சஸ் அளவான மீகொல்ல தங்கொல்ல வத்த காணியில் பொது வசதிகளுக்காக சபைக்கு கையளிக்கப்பட்ட காணிப் பகுதி தொடர்பாக 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது 17.5 பேர்சஸ் அளவான 18 ஆம் இலக்க பகுதி உரிய பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காடு வளர்ந்திருந்ததுடன் 60 பேர்சஸ் அளவான 30 ஆம் இலக்க பகுதியில் 7 பேர்சஸ் அளவானது கல் படாரையைக் கொண்டிருந்தது. அவ்வாறே 2012 ஏப்ரல் 17 ஆந் திகதி காணிக்கூறுகள் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பிலெஸ்ஸ ஹேனேபொல வளவ்வத்த காணியின் இலக்கம் 22 மற்றும் 23 இற்கு மேலாக அதிசக்தி வாய்ந்த மின்சாரக் கம்பிகள் முறைமையொன்று காணப்பட்ட போதிலும் அதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 45,406,318 தொகை பெறுமதியான காணி மற்றும் கட்டிடம் காணப்பட்ட போதிலும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி இலக்கம் 218 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ரூபா 12,469,434 பெறுமதியான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 அறவிடுவதற்குள்ள ஊழியர் கடன்

மீளாய்வாண்டின் இறுதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் மீதிகள் ரூபா 301,030 ஆக இருந்ததுடன் அதனுள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ஊழியர் கடன் மீதிகள் ரூபா 292,530 ஆக இருந்தது.

## 2.5 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவத்தகம பொதுச் சந்தையில் ஒரு மாட்டிறைச்சிக் கடைக்காக 2006 ஆம் ஆண்டுக்குரியதாகக் காணப்பட்ட ரூபா 29,300 தொகையான நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக வழக்கு இல. 12144/எம் இன் கீழ் 2008 யூன் 10 ஆந் திகதி தொடுக்கப்பட்ட வழக்கு இறுதியாக 2011 ஆகஸ்ட் 19 ஆந் திகதி நீதிமன்றத்தின் மூலம் அழைக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது அறிவித்தல் ஆணையினை கையளிப்பதற்கு எதிராளியின் முகவரியை அறிவிக்குமாறு சபைக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை சபையினால் அந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக வழக்கு நடவடிக்கைகள் தொங்கிக் கொண்டிருந்தது.

(ஆ) சபையின் ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தரை இடமாற்றுதல் தொடர்பான வழக்கு இல. எஸ்சீ(எப்ஆர்) 137/2011 இன் கீழ் உரிய வைத்தியரினால் சபைக்கும் இன்னொருவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் அதற்கான வழக்குக் கட்டணமாக ரூபா 136,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) சுற்றாடலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் அரிசி ஆலையொன்றை நடாத்திச் செல்வது தொடர்பாக அதன் உரிமையாளருக்கு எதிராக சபையினால் 2012 நவம்பர் 03 ஆந் திகதி வழக்கு இல. 7148 இன் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் கூட்டிணைந்த திட்டம் அல்லது மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போதியளவான உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,253,344 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 9,710 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

## 2.7 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

நிதிக்கூற்றுக்களில் தீர்க்கப்படாது நீண்ட காலமாகப் பேணப்பட்டு வருகின்ற நீர்த் திட்டத்திற்குரிய ரூபா 5,628,507 பெறுமதியான 08 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பிளிசறு தேசிய கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மூலம் சபைக்கு ரூபா 6 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் 2011 நவம்பர் 04 ஆந் திகதி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2011 ஏப்ரல் 04 ஆந் திகதி செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டத்திற்குரிய ரூபா 2,650,223 தொகையான கிரயம் மாத்திரம் செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக பிளிசறு செயற்திட்ட அலகினால் சபைக்கு 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதி கூட்டுப்பசளை அரைக்கும் இயந்திரம் மற்றும் 2012 ஒக்தோபர் 23 ஆந் திதி டெக்ரர் ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்